**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.பி.எண்.54/2023 அதன் அ.வ.எண்.192/2012**

1) ஷாஜகான்
2) செய்யது அலி பாத்திமா ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

அப்துல் ஹக்கீம் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது 12.09.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.கோவிந்தன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அபினேஷ் முருகேஷ் அவர்கள் ஆஜரானார். ஆனால் வாதுரை செய்யவில்லை. மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்டும் மற்றும் இரு தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

**உத்தரவு**

நிறைவேற்றுகை மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 32 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுவின் சுருக்கம்**

மனுவின் எதிர்மனுதாரர் மீது விளம்புகை, நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி திருநெல்வேலி 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த

அ.வ.எண்.192/2012 என்ற மேற்படி வழக்கானது விசாரணைக்கு பின்பு 17.02.2023ம் தேதி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, மேற்படி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் அடிப்படையில் 3 வது தபசில் சொத்தில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்புகளை எதிர்மனுதாரர் அகற்றும் படியும் தவறினால் நீதிமன்றமே அமீனா மூலம் அகற்றி உத்தரவிட வேண்டி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3) எதிருரை மற்றும் கூடுதல் எதிருரை சுருக்கம்</u>**

3.1) மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிமன்றம், திருநெல்வேலியில் ஏ.எஸ்.எண்.58/2023 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் தடையாணை கோரி தாக்கல் செய்த இ.ம.எண்.2/2023 என்ற மனுவானது நிலுவையில் உள்ளது என்றும், எனவே, மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் நிறைவேற்றுகை மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், இந்த எதிர்மனுதாரருக்கு மேல்முறையீட்டில் நல்ல வழக்கு உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4). இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இரு தரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிறுத்தவில்லை.

5). **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

6). மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் வாதுரை செய்வதற்காக 18.06.2025, 26.06.2025, 23.07.2025, 11.08.2025, 18.08.2025, 02.09.2025, 12.09.2025 ஆகிய தேதிகளில் வாய்ப்பு அளிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில்

ஆஜராகியிருந்த போதும், வாதுரை செய்ய முன்வரவில்லை. எதிர்மனுதாரருக்கு போதிய வாய்ப்பு நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்மனுதாரர் தரப்பு வாதுரையை இந்நீதிமன்றத்தால் தானாக நீதியின் நலன் கருதி முடித்து வைக்கப்பட்டது.

6.1) இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கானது விளம்புகை, நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி திருநெல்வேலி 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.192/2012ல் கடந்த 17.02.2023ம் தேதி மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

7) இந்த மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண்.192/2012ல் கடந்த 17.02.2023ம் தேதி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது இரு தரப்பிலும் ஒத்துக் கொள்ளப்பட்ட சங்கதியாகும். இந்நிலையில், மேற்படி மனு சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் ஆட்சேபணை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், நிறைவேற்றுதல் மனுவை மேல் நடத்த தடையாணை எதுவும் மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் எதுவும் பிறப்பிக்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

8) நிறைவேற்றுகை மனுவானது 2023ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உச்சநீதிமன்றம் 06.03.2025ம் தேதி Civil Appeal No.3640 – 3642 /2025ல் Periyammal (Dead) Through Lrs and Ors –vs– V.Rajamani & Anr.ETC–ல் பிறப்பித்த உத்தரவிற்கிணங்க மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ROC.No.21393–B/2025/B5/Statistics பிறப்பித்த வழிகாட்டுதலுக்கு இணங்க நிறைவேற்றுகை மனுவை 6 மாத காலத்திற்குள் முடிக்க வேண்டும்.

9) எனவே, நிறைவேற்றுதல் நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டு நீதிமன்றங்களால் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்ற எந்தவிதமான தடையாணை பிறப்பிக்கப்படாத நிலையிலும், மனு தபசில் சொத்து இந்த மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதும் தெரிய வருகிறது. எனவே, நிறைவேற்றுதல் நீதிமன்றமான இந்நீதிமன்றம் அ.வ.எண்.192/2012 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு இணங்க மனு தபசில் சொத்தின் உரிமையாளரான மனுதாரர்களிடம் மனு தபசில் சொத்தை மீட்டுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த நீதிமன்றத்திற்கு உள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு இணங்க நடக்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

10) எனவே, பிராது 3 ம் தபசில் சொத்து விபரத்திலும், பிராது வரைபடத்திலும் குறிப்பிட்டுள்ள F.F1-F2.F4-E.E2 பகுதியில் 30 அடி நீளம் 3 அடி அகலம் உடைய தென்வடல் கோடியை அடைத்து 9-1/4 அடி நீளமுள்ள F-F2 நேர்கோட்டு பகுதியிலுள்ள சுவரையும் E1 லிருந்து B1 வரை கிழமேலாக 29 அடி நீளத்தில் வாதிகளின் இடத்தை ஆக்கிரமித்து பிரதிவாதி கட்டியுள்ள சுவரையும், அந்த சுவற்றில் B1, B2 என்று காட்டப்பட்டுள்ள வாசலையும் எதிர்மனுதாரர்/ பிரதிவாதியிடம் இருந்து நீதிமன்ற அமீனா மூலம் அகற்றி மனுதாரர்களிடம் கொடுப்பது தான் நீதியின் நலனுக்கும் சிறந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை இந்த உத்தரவின் ஒரு பகுதியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

***இறுதியில், இம்மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.*** **Delivery Batta in 3 days. Delivery on or before 06.10.2025 Call on 07.10.2025.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் எழுதப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

order uploaded on 12.09.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.09.12 18:21:23 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1). மனுதாரர் தரப்பு சாட்சிகள் : இல்லை
2). மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை
3). எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் : இல்லை
4). எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

order uploaded on 12.09.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.09.12 18:21:34 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.பி.எண்.54/2023
**அதன்**
அ.வ.எண்.192/2012
வரைவு/சீரான உத்தரவு
நாள் – 12.09.2025